*கவனிக்க .- 2015.01.02 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி III மற்றும் பகுதி IV (அ) ஆகியன பிரசுரிக்கப்படவில்லை.*

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1897 - 2015 ජනවාරි මස 09 වැනි සිකුරාදා - 2015.01.09

*1897 ஆம் இலக்கம் - 2015 ஆம் ஆண்டு சனவரி மாதம் 09 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

## *பகுதி II - சட்ட சம்பந்தமானது*

*(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)*


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| சட்டங்கள் | - | பிசுக்கால் மார்சல்மாரின் நியமனங்கள் | - |
| சட்டமூலங்கள் | - | பிசுக்கால் விற்பனை பற்றிய அறிவித்தல்கள் | - |
| மேன்முறையீட்டு நீதிமன்றச் சட்ட அறிவித்தல்கள் | - | மரணசாதன வழக்குகளின் அறிவித்தல்கள் | - |
| உயர் நீதிமன்ற அறிவித்தல்கள் | - | சட்டக் கல்விச் சபையின் அறிவித்தல்கள் | - |
| உயர் நீதிமன்ற குற்றவிசாரணை பற்றிய அறிவித்தல்கள் | - | நொத்தாரிசுமார் பெயர் பட்டியல் | - |
| மாவட்ட நீதிமன்ற, நீதிவான் நீதிமன்ற அறிவித்தல்கள் | - | நானாவித அறிவித்தல்கள் | 10 |
| கடனிறுக்க முடியாமைக்கான வழக்குகளின் அறிவித்தல்கள் | - | பிசுக்கால் மார்சல்மாரின் நியமனங்கள் | - |


### *வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான*
### *முக்கிய அறிவித்தல்கள்*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2015, சனவரி மாதம் 30 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2015, சனவரி மாதம் 16 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டம் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

***பீ. எச். எல். வீ. டீ சில்வா,***
*அரசாங்க அழுத்தகர் (பதில்).*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2015 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# நொத்தாரிசுமார் பெயர் பட்டியல்

## நொத்தாரிசுக் கட்டளைச் சட்டம்

நொத்தாரிசு அனுமதிப்பத்திரத்தினை மீளளிப்பு செய்தல்

*2014.08.15 ஆந் திகதிய 1876 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலின் மூலம் 2014.05.21 ஆந் திகதி தொடக்கம் நொத்தாரிசு நடவடிக்கையினை மேற்கொள்ள இடைநிறுத்தப்பட்டிருந்த கம்பஹா நீதாசன வலயத்தினில் சிங்கள மொழியில் கடமையாற்றுவதற்கு அனுமதிபெற்ற திரு. கஜசிங்கசே ருக்மன் சந்தன சில்வா அவர்களின் 2007.04.11 ஆந் திகதிய 15250 ஆம் இலக்க நொத்தாரிசு அனுமதிப்பத்திரம் நொத்தாரிசுக் கட்டளைச்சட்டத்தின் 19 (1) ஆவது பிரிவின் கீழ் கௌரவ பொது நிருவாக உள்நாட்டலுவல்கள் அமைச்சரினால் 2014.05.21 ஆந் திகதி முதல் நடைமுறைக்கு வரும் விதத்தில் மீளளிக்கப்பட்டுள்ளது என இத்தால் அறிவிக்கின்றேன்.*

பீ. பி. அபேகோன்,
செயலாளர்,
பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள்
அமைச்சு.

கொழும்பு-07,
2014, திசெம்பர் 12.

1-316

# நானாவித அறிவித்தல்கள்

## ரவிசந்திர அமைப்பு கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்

*சுதர்சனி பெர்னாந்துபுள்ளே ஆகிய நான் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தின் நிலையியற் கட்டளை இலக்கம் 48 இன் கீழ் "ரவிசந்திர அமைப்பு கூட்டுத்தாபன சட்டம்" எனப்படும் சட்டமூலமொன்றைப் பாராளுமன்றத்தில் அறிமுகம் செய்ய எண்ணியுள்ளேன் என்பதை இத்தால் அறியத்தருகின்றேன்.*

இதன் நோக்கங்கள் பின்வருமாறு :

(1) நாட்டு உரிமைகள் எமது அடையாள கலாசார விருத்தி செய்து போஷிப்பதற்கு உரித்துடைய நிறுவனங்களுக்கு உதவியளித்தல்;

(2) மேலே 1 ஐ நடைமுறைப்படுத்துவதன் ஊடாக புதிய உற்பத்திகளை உருவாக்குதல், புதிய நிர்மாணிப்புகளை உருவாக்குதல் மற்றும் அந்தத் துறைகளினுள் சுய தொழில்களை உருவாக்குவதற்கு உரித்துடைய நிறுவனங்களுக்கு உதவியளித்தல்;

(3) இலங்கையின் கலாசாரம் பாதுகாக்கப்படும் விதத்தில் உற்பத்திகளுக்கு சந்தையில் நியாயமான விலையொன்றைப் பெற்றுக்கொடுத்தல் ஊடாக அந்த உற்பத்தியாளர்களின் தொழில்களை பாதுகாப்பதற்காக உரித்துடைய நிறுவனங்களுக்கு உதவியளித்தல் மற்றும் ஏனையவை.

சுதர்சனி பெர்னாந்துபுள்ளே,
பாராளுமன்ற உறுப்பினர்,
கம்பஹா மாவட்டம்.

1-267

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.